தொட்டியம் பகுதி மின் ஆய்வில் விதிமீறல் ரூ. 10,170 அபராதம்

முசிறி, செப். 9: திருச்சி மாவட்டம் முசிறி உட்கோட்டம் தொட்டியம் காட்டுப்புத்தூர் மின் பகிர்மான பகுதியில் சிறப்பு கூட்டுக் குழுவினர் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

பின்னர் முசிறி செயற்பொறியாளர் தலைமையில் காட்டுப்புத்தூர் மின் பிரிவு அலுவலக பகுதிகளில் உள்ள அனைத்து மின் இணைப்புகளையும் மின் வாரிய அலுவலர் மற்றும் பணியாளர்கள் 30 பேர் கொண்ட குழு கள ஆய்வு செய்தனர்.

இந்தக் கள ஆய்வில் 601 மின் இணைப்புகள் ஆய்வு செய்ததில் 1 மின் விதிமீறல் கண்டறியப்பட்டு அதற்கான அபராதம் ரூ. 10,170 விதிக்கப்பட்டது.

ஸ்ரீரங்கத்தில் அடிப்படை வசதி கேட்டு சிஐடியு ஆர்ப்பாட்டம்

ஸ்ரீரங்கம், செப். 9: ஸ்ரீரங்கம் பகுதியில் அடிப்படை வசதி செய்து தரக்கோரி சிஐடியு அமைப்பினர் புதன்கிழமை ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஸ்ரீரங்கம் பகுதி சாலைப்போக்குவரத்துத் தொழிலாளர் சங்கம் மற்றும் சிஐடியு சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு பகுதித் தலைவர் மகேஷ் தலைமை வகித்தார்.

சிஐடியு மாவட்டத் தலைவர் மணிமாறன் ஆர்ப்பாட்டம் குறித்து விளக்கினார். சாலைப் போக்குவரத்து தொழிலாளர் சங்க மாவட்டத் தலைவர் சுரேஷ், மாவட்ட செயலர் சந்திரன், பகுதிச் செயலர் சுப்பிரமணி, பகுதி பொருளாளர் ராமன் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். பகுதி துணைத் தலைவர் தினேஷ் நன்றி கூறினார்.

நடுவலூரில் குடிநீர் கேட்டு முற்றுகை

துறையூர், செப். 9: குடிநீர் கேட்டு திருச்சி மாவட்டம், துறையூர் ஒன்றியம் நடுவலூர் ஊராட்சி அலுவலகத்தை பொதுமக்கள் புதன்கிழமை முற்றுகையிட்டனர்.

கீழ நடுவலூரிலுள்ள கிழக்குத் தெரு, தெற்கு தெரு பகுதிகளில் கடந்த ஒரு மாதமாக முறையாக குடிநீர் விநியோகிக்காததால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் ஊராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டும் நடவடிக்கை இல்லையாம்.

இதனால் அதிருப்தியடைந்த மக்கள் காலிக் குடங்களுடன் சென்று ஊராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டனர். தகவலறிந்த துறையூர் வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணகுமார் நேரில் சென்று பேசி, ஆழ்துளைக் கிணறு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்ததால் பொதுமக்கள் கலைந்து சென்றனர்.

மதுவுக்கு அடிமையான இளைஞர் தற்கொலை

ஸ்ரீரங்கம், செப். 9: திருவானைக்காவல் பகுதியில் மது போதைக்கு அடிமையான இளைஞர் செவ்வாய்க்கிழமை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

திருவானைக்காவல் நடுக்கொண்டையம்பேட்டை பகுதியைச் சேர்ந்தவர் மகேந்திரன் மகன் சுரேஷ்குமார் (27). திருமணம் ஆகாத இவர் எப்போதும் மது போதையிலேயே இருப்பாராம். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை மாலை வீட்டில் அவர் தூக்கிட்டுத் தற்கொலைசெய்துகொண்டார். தகவலறிந்து வந்த ஸ்ரீரங்கம் போலீஸார் சுரேஷ்குமாரின் உடலை கைப்பற்றி ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரிக்கின்றனர்.

4-ஆவது மாடியிலிருந்து தவறிவிழுந்தவர் உயிரிழப்பு

திருச்சி, செப். 9: திருச்சியில் 4-ஆவது மாடியிலுள்ள குடிநீர்த் தொட்டியில் மதுபோதையில் படுத்திருந்த இளைஞர் தவறி கீழே விழுந்து செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார்.

திருச்சி மலைக்கோட்டை ஜாபர்ஷா வீதியைச் சேர்ந்தவர் கோபி மகன் பாரதி (32). பெரிய கம்மாள வீதியிலுள்ள மளிகைக் கடை ஊழியரான இவர், திங்கள்கிழமை இரவு மதுபோதையில் வீட்டின் 4-ஆவது மாடியிலுள்ள தண்ணீர்த் தொட்டி மீது படுத்துத் தூங்கினார். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை அதிகாலை மாடியில் இருந்து தவறி கீழே விழுந்த அவர் பலத்த காயமடைந்தார்.

இதையடுத்து பாரதியை திருச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இதுகுறித்து கோட்டை போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

முதல்வர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் தொடக்கம்

திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் விளையாட்டுப் போட்டிகளை புதன்கிழமை தொடங்கி வைத்த ஆட்சியர் பிரத்திக் தாயள்.

திருச்சி, செப். 9: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் மாவட்ட அளவிலான முதல்வர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் திருச்சி அண்ணா விளையாட்டரங்கில் புதன்கிழமை தொடங்கின.

இதை மாவட்ட ஆட்சியர் பிரத்திக் தாயள் தொடங்கி வைத்து விளையாட்டு வீரர்களிடம் கலந்துரையாடினார்.

வரும் 27 ஆம் தேதி வரை நடைபெறும் போட்டிகளில் பள்ளி, கல்லூரி, பொதுப்பிரிவு, மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள் ஆகிய 5 வகை பிரிவினருக்கு மாவட்ட அளவில் தடகளம், கபடி, இறகுப்பந்து, வாலிபால், சிலம்பம், சதுரங்கம், கிரிக்கெட், கூடைப்பந்து, கையுந்துபந்து, கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல், மேசைப் பந்து, கோ-கோ, பால் பாட்மின்டன், சிறப்பு கையுந்துபந்து, வீல்சேர் டேபிள் டென்னிஸ் மற்றும் எறிபந்து, யோகாசனம், ஸ்பீடு ஸ்கேட்டிங் ஆகிய போட்டிகள் அண்ணா விளையாட்டரங்கம், ஜெ.ஜெ. பொறியியல் கல்லூரி, ஜமால் முகமது கல்லூரி, தந்தை பெரியார் கல்லூரி, ஸ்டெம் பார்க் எதிரில் உள்ள ஹெலிபேட் மைதானம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகளில் பங்கேற்க மொத்தம் 11,98,38 பேர் தங்களது பெயர்களை இணையதளம் மூலம் பதிந்துள்ளனர்.

ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களில் வெல்வோருக்கு முதல் பரிசாக தலா ரூ. 3,000, இரண்டாம் பரிசாக தலா ரூ. 2,000, மூன்றாம் பரிசாக தலா ரூ. 1,000 அவரவர் வங்கி கணக்குக்கு நேரடியாக வழங்கப்படும்.

நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர் ஞானசுகந்தி, விளையாட்டு விடுதி மேலாளர் கண்ணன், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருச்சி விமான நிலையத்தில் 3 பயணிகளிடமிருந்து 81 பவுன் தங்கம் பறிமுதல்

திருச்சி, செப். 9: மலேசியாவில் இருந்து 3 பயணிகள் கடத்தி வந்த 81 பவுன் தங்கத்தை திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத் துறையினர் செவ்வாய்க்கிழமை இரவு பறிமுதல் செய்தனர்.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இருந்துதிருச்சி விமான நிலையத்துக்கு செவ்வாய்க்கிழமை இரவு வந்த பாட்டிக் விமானத்தில் தங்கம் கடத்தி வருவதாக கிடைத்த ரகசிய தகவலின்பேரில் சுங்கத் துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

அப்போது 3 பயணிகள் தங்களது உடைமைகளில் 24 கேரட் கொண்ட 81 பவுன் (648 கிராம்) தங்கத்தை மறைத்துக் கடத்திவந்தது தெரியவந்தது. இதையடுத்து அவற்றைப் பறிமுதல் செய்த அதிகாரிகள் அப் பயணிகளிடம் விசாரணை மேற்கொண்டனர்.

இதேபோல, கடந்த செப். 5-ஆம் தேதி சிங்கப்பூரில் இருந்து வந்த பயணி ஒருவர் தனது உள்ளாடையில் மறைத்துக் கடத்தி வந்த 24 கேரட் கொண்ட 36 பவுன் தங்கமும், மலேசியா செல்ல கடந்த ஞாயிற்றுக்கிழமை திருச்சி வந்த பயணி ஒருவர் அனுமதியின்றி எடுத்து வந்த ரூ. 7.5 லட்சம் பணமும் பறிமுதல் செய்யப்பட்டதாக சுங்கத் துறையினர் தெரிவித்தனர்.

மாவட்டத்தின் 14 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

திருச்சி, செப். 9: திருச்சி மாவட்டத்தின் 14 இடங்களில் அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் திருச்சி மண்டலம், விவசாயிகளிடமிருந்து மத்திய அரசின் வழிகாட்டுதல்படி, தமிழ்நாடு அரசு பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் காரீப் 2026-27 பருவத்தில் செப். 1 முதல் 2027 ஆகஸ்ட் 30 வரை நெல் கொள்முதல் செய்ய லால்குடி வட்டத்தில் இ. வெள்ளனூர், ஆலம்பாடி, அரியூர், செங்கரையூர், மங்கம்மாள்புரம், ஜெங்கமராஜபுரம், நத்தமாங்குடி, வி. துறையூர், முள்ளால், திண்ணியம், மேட்டுப்பட்டி, கோமாக்குடி, கூகூர், திருவெறும்பூர் வட்டத்தில் உள்ள பொய்கைக்குடி உள்ளிட்ட 14 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தங்களது நெல்லை விற்க பட்டா, சிட்டா, அடங்கல், ஆதார் அட்டை நகல், வங்கிக் கணக்கு புத்தக நகல் ஆகிய ஆவணங்களை கொள்முதல் நிலையத்தில் வழங்கி, முறையாக பதிந்து நெல்லை விற்கலாம்.

சன்னரக நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை ரூ. 2,461- (குவிண்டால் ஒன்றுக்கு) உடன் மாநில அரசின் ஊக்கத்தொகை ரூ. 289- (குவிண்டல் ஒன்றுக்கு) சேர்த்து மொத்தம் ரூ. 2,750- என்ற விலையில் கொள்முதல் செய்யப்படும்.

பொது ரக நெல்லுக்கான ஆதார விலை ரூ. 2,441- (குவிண்டால் ஒன்றுக்கு) உடன் மாநில அரசின் ஊக்கத்தொகை ரூ. 159- (குவிண்டால் ஒன்றுக்கு) சேர்த்து மொத்தம் ரூ. 2,600- என்ற விலையிலும் கொள்முதல் செய்யப்படும். விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்குண்டான தொகை அவர்களுடைய வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும்.

மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட தரக் குறியீடுகளின்படி 17 சதவீதத்துக்கு மிகாத ஈரப்பதத்தில் விவசாய நெல்லை தூற்றி கொள்முதல் செய்யப்படும். இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் பிரத்திக் தாயள் தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற வளாகத்தில் கைதிக்கு கஞ்சா வழங்கல்: இருவர் மீது வழக்கு

திருச்சி, செப். 9: திருச்சி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்த கைதியிடம் கஞ்சா வழங்கிய இளைஞர் மீதும், அந்தக் கைதி மீதும் போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

திருச்சி சிந்தாமணி அந்தோணியார் கோயில் வீதியைச் சேர்ந்தவர் எம். அபிஷேக் (23), சரித்திரப் பதிவேடு குற்றவாளி. பொன்மலை காவல் நிலையத்தில் பதியப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட இவரை, திருச்சி மாவட்ட 2-ஆவது கூடுதல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த ஆயுதப் படை போலீஸார் செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தனர்.

அப்போது, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நின்றுகொண்டிருந்த அபிஷேக் அருகே வந்த இளைஞர் ஒருவர், அவரிடம் ஒரு பொட்டலத்தை கொடுத்தார். அப்போது அவருடன் வந்த போலீஸார் அதை வாங்கிப் பிரித்து பார்த்தபோது, அதில் கஞ்சா இருந்தது தெரியவந்தது. இதற்கிடையே, குற்றவாளிக்கு கஞ்சா வழங்கிய இளைஞர் நீதிமன்ற வளாகத்தில் இருந்து தப்பியோடிவிட்டார்.

இதுகுறித்து அமர்வு நீதிமன்ற காவல் நிலையத்தில் திருச்சி ஆயுதப்படை சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் வீராசாமி அளித்த புகாரின் பேரில், போலீஸார் அபிஷேக் மற்றும் அவருக்கு கஞ்சா பொட்டலத்தை வழங்கிய அரியமங்கலம் காமராஜ் நகரைச் சேர்ந்த எஸ். அஸார் (26) ஆகியோர் மீது வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்

muthoot FINCORP

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: முத்தூட் மையம், TC எண். 27/3022, புன்னன் சாலை, திருவனந்தபுரம், கேரளா - 695 001.
CIN: U65929KL1997PLC011518
தொலைபேசி: +91 471 4911550 | வலைத்தளம்: www.muthootfincorp.com

பொது அறிவிப்பு
தங்கக் கடன் கணக்குகளின் ஏல உபரித் தொகையைத் திரும்பப் பெறுதல்

தங்கக் கடன் கணக்குகளைத் திருப்பிச் செலுத்துவதில் ஏற்பட்ட தவறு காரணமாக நடத்தப்பட்ட அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளின் ஏலங்களிலிருந்து மீத உபரித் தொகைகள் உள்ளன என்பதை முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் நிறுவனத்தின் கடன் வாங்கியவர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. பின்வரும் கடன் கணக்கு எண்கள் உபரித் தொகையைத் திரும்பப் பெறுவதற்குத் தகுதியுடையவை:

தகுதியான கடன் எண்கள்: **DINDIGUL DISTRICT** :- BATLAGUNDU:- 030700904, 030701266, 030702271, 030702504, 030702574, F114528, F114555, F115937, F116144, F116420, F116682, F117329, F117457, F117777. BATLAGUNDU-MADURAI ROAD:- 346500488, 346501448, F25977, F26312, F26430, F26565, F26592, F29092. CHINNALAPATTI:- 148000125, 148000350, 148001050, F12521, F12522, F12523, F12524, F14252, F16621, F16703, F16937. DINDIGUL 1:- 019000603, F56871, F58456. DINDIGUL 2:- 043600455, F79199, F80448. DINDIGUL-3:- F20765, F20967, F21014. ERIYODU:- F15952, F16144, F16360. GOPALPATTI-DINDIGUL:- 198000020, 198000164, 198000518, 198000677, 198000682, 198000967, 198000992, 198001131, 198001211, F13730, 198001300, F17474, F17797, F17877. KALLIMANTHAYAM:- 284100251, F13187, F15177. KODAIKANAL:- 020500510, 020500668, 020500808. NATTAM:- 029800020, 029800325, 029801392, F75140, F77129. NILAKKOTTAI:- F32428, F32698, F32703, F32874. ODDANCHATHRAM:- F93887, F94258. PALANI:- 050500123, 050500479, 050501820, F34851, F35121, F36075, F35519, F36112, F36524, F36554, F36555. PALANI-UDUMALAI ROAD:- F19953. PANNAIKADU-DINDIGUL:- 199300071, 199301149, 199301755, 199302088, F35469, F35470, F35471, F35472, F36221. VADAMADURAI-DINDIGUL:- 246500336, 246500368, F16439, F17861, F18399. VEDACHANDOOR:- 040300123, F59354, F59972, F61939. **KARUR DISTRICT** :- ARAVAKURUCHI-KARUR:- 229300065, 229300330, 229300373, 229300622, 229300650, 229300867, 229301065, 229301233, 229301523, F12968, F13303, F13510, F13857, F14368, F14399, F14849, F14944. GANDIGRAM-KARUR:- 216601751, F19636, F19740. K.PARAMATHI-KARUR:- 206800292, 206800310, 206800454, 206800504, 206801084, 206801747, F18199, F18416, F18908. KARUR:- 022501606, F78357, F78474, F80580. KARUR-LIGHT HOUSE CORNER:- 160300034, 160300347, 160300546, F14610, F15115, F15361, F15881. THANTHONIMALAI:- 215400075, 215400313. VELAYUTHAMPALAYAM:- F10329, F11107, F11331, F11362. VENGAMEDU-KARUR:- 248400609.

தகுதியுள்ள கடன் வாங்கியவர்கள், அல்லது கடன் வாங்கியவரின் மரணம் அல்லது அவர் கிடைக்காத பட்சத்தில் அவர்களின் நியமனதாரர்/சட்டப்பூர்வ வாரிசு, பணத்தைத் திரும்பப் பெறுவதற்காக, செல்லுபடியாகும் அடையாள அட்டை, அசல் அடமானப் படிவம் மற்றும் பிற தொடர்புடைய கடன் விவரங்களுடன் முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் நிறுவனத்தின் அருகிலுள்ள கிளைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பணத்தைத் திரும்பப் பெறும் செயல்முறை தொடர்பான எந்தவொரு உதவிக்கும், தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட், முத்தூட் மையம், TC எண் 27/3022, புன்னன் சாலை, திருவனந்தபுரம் 695001

வாடிக்கையாளர் சேவை மையம்: 1800-102-1616
இமெயில்: customercare@muthoot.com
இணையதளம்: www.muthoot.com

முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்

முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்

muthoot FINCORP

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: முத்தூட் மையம், TC எண். 27/3022, புன்னன் சாலை, திருவனந்தபுரம், கேரளா - 695 001.
CIN: U65929KL1997PLC011518
தொலைபேசி: +91 471 4911550 | வலைத்தளம்: www.muthootfincorp.com

பொது அறிவிப்பு
தங்கக் கடன் கணக்குகளின் ஏல உபரித் தொகையைத் திரும்பப் பெறுதல்

தங்கக் கடன் கணக்குகளைத் திருப்பிச் செலுத்துவதில் ஏற்பட்ட தவறு காரணமாக நடத்தப்பட்ட அடகு வைக்கப்பட்ட தங்க நகைகளின் ஏலங்களிலிருந்து மீத உபரித் தொகைகள் உள்ளன என்பதை முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் நிறுவனத்தின் கடன் வாங்கியவர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. பின்வரும் கடன் கணக்கு எண்கள் உபரித் தொகையைத் திரும்பப் பெறுவதற்குத் தகுதியுடையவை:

தகுதியான கடன் எண்கள்: **PERAMBALUR DISTRICT** :- PERAMBALUR:- F15785. **PUDUKKOTTAI DISTRICT** :- ALANGUDI:- 042201377, F42137, F47503, F49292. ARANTHANGI:- 034900084. ARIMALAM:- 322600703. GANDARUAKOTTAI:- 177400508, 177400772, F17723, F19048, F22761, F23471. ILLUPPUR:- 322500093, 322500642, 322501336, 322501357, 322501373, F18707. KARAMBAKUDI:- 329300168, 329300860, F22827, F23118, F23153, F24314, F24831, F24962. KIRANNUR:- 034800206, 034800564, F49939, F50005, 034800618, 034801221, 034802175. MANAMELKUDY:- 130100071, 130101296, F24603. PUDUKOTTAI 2:- 043100444, F52722. PUDUKOTTAI-SANTHANATHAPURAM:- 181500031, F19586. VIRALIMALAI-PUDUKKOTTAI:- 331500805. **TRICHY DISTRICT** :- DALMIAPURAM:- 2715000305, F10251, F12010. LALGUDI-POVALUR ROAD:- 3643000116, 3643000121, 3643000266, 3643000481, 3643000638, 3643000765, 3643000648, F13045, F13095, F16893. MANAPPARAI:- F13464. MUSIRI:- 1445000710, 1445000786. PONMALAIPATTY-TIRUCHIRAPPALLI:- 351400494. SRIRANGAM-RAJAGOPURAM:- 388900051. SUNDARANAGAR:- 042500231, 042500244, F24181. THIRUVARAMBUR:- 233200063, F16776, 233200249, 233200259, 233200274, F13471, F15236, F16581. THURAIYUR:- 1467000381, 1467000834, F10864. THUVARANKURUCHI:- 126800615, F22800, F25638, F25974, F26099, F26514. TOLGATE:- F35812. TRICHY-K K NAGAR:- 283701377. VAIYAMPATTI-RAILWAY STATION ROAD:- 283600088, 283600115, 283600202, 283600758, F13780, F13842, F13878, F14154, F14223.

தகுதியுள்ள கடன் வாங்கியவர்கள், அல்லது கடன் வாங்கியவரின் மரணம் அல்லது அவர் கிடைக்காத பட்சத்தில் அவர்களின் நியமனதாரர்/சட்டப்பூர்வ வாரிசு, பணத்தைத் திரும்பப் பெறுவதற்காக, செல்லுபடியாகும் அடையாள அட்டை, அசல் அடமானப் படிவம் மற்றும் பிற தொடர்புடைய கடன் விவரங்களுடன் முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட் நிறுவனத்தின் அருகிலுள்ள கிளைக்குச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பணத்தைத் திரும்பப் பெறும் செயல்முறை தொடர்பான எந்தவொரு உதவிக்கும், தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட், முத்தூட் மையம், TC எண் 27/3022, புன்னன் சாலை, திருவனந்தபுரம் 695001

வாடிக்கையாளர் சேவை மையம்: 1800-102-1616
இமெயில்: customercare@muthoot.com
இணையதளம்: www.muthoot.com

முத்தூட் ஃபின்கார்ப் லிமிடெட்

புரொபஷனல் கூரியர்ஸ் நெட்வொர்க் லிமிடெட்

CIN : U74950TN2007PLC062401

அல்-பரக்கா டவர்ஸ், புதிய எண். 10, கே.பி.தாசன் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600018.
Ph. 044 - 4231 6425. மெயில் : investor.relations@pcnl.in, இணையதளம்: www.pcnl.in

அறிவிப்பு - 19வது ஆண்டு பொதுக்குழு கூட்டம் மற்றும் புத்தகம் மூடுதல்

இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் நிறுவனத்தின் **19-வது வருடாந்திர பொதுக்குழு கூட்டம் (AGM) புதன்கிழமை 30, செப்டம்பர் 2026 நண்பகல் 12:30 மணிக்கு 'வராஹரி ஹால்', ஹோட்டல் ரமதா பிளாஸா, # 36, சர்தார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை - 600032** எனும் முகவரியில் நடைபெறும். நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு, 101 மற்றும் 136 மற்றும் அதனுடன் இணைந்து வாசிக்க வேண்டிய நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014, விதி 18-20க்கு இணங்க, பொது சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவனங்கள் சட்டம் 2013 பிரிவு 102(1) - ன் படி விளக்க அறிக்கையும் மார்ச் 31, 2026 - ல் முடிவடைந்த நிதி ஆண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் பொதுக்குழு கூட்ட அழைப்பு அறிவிப்பு நிறுவனத்திடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு மின்னணு வாயிலாக கம்பெனியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மின்னணு வாயிலாக (E-mail) அறிவிப்பு அனுப்பும் பணி **08 செப்டம்பர் 2026** அல்லது அதற்கு முன்னர் முடிக்கப்படும்.

இந்த AGM அறிவிப்பு நிறுவனத்தின் இணைய தளத்தில் (www.pcnl.in) கிடைக்கின்றன.

மேற்படி சட்டம் விதிகளை கடைப்பிடிக்கும் விதத்தில் தொலைவிலிருந்து மின்னணு முறையில் வாக்குப்பதிவு செய்யும் வசதியை (REMOTE E-VOTING) நிறுவனம் பங்குதாரர்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது. தொலைவிலிருந்து கணினி வாக்குப்பதிவு வழங்கும் அதிகாரப்பூர்வ ஏஜென்சி KFIN டெக்னாலஜி நிறுவனத்தின் சேவை ஈடுபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி சட்டம் மற்றும் விதிகளுக்கு இணங்க பின்வரும் விபரங்கள் வழங்கப்படுகின்றன.

(a). மின்னணு முறையில் வாக்களிப்பதற்கான தகுதியை நிர்ணயிப்பதற்கு உரிய வரம்பு தேதி (CUT OF DATE) **24 செப்டம்பர் 2026** ஆகும். தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு செய்யும் வசதி **27, செப்டம்பர் 2026 (காலை 09.00மணி) முதல் தொடங்கி 29, செப்டம்பர் 2026 (மாலை 05.00மணி)** வரை மூன்று நாட்களுக்கு செயல்பாட்டில் இருக்கும். தாள் வடிவில் அல்லது மின்னணு வடிவில் (DEMAT) பங்குகளை வைத்துள்ள அனைத்து பங்குதாரர்களும் வாக்களிக்கலாம். **29, செப்டம்பர் 2026 அன்று மாலை 05.00 மணிக்குப்பின்** E-வாக்குப் பதிவு செய்யும் வசதி செயல்பாட்டில் இருக்காது.

(b). தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு செய்திடாத பங்குதாரர்கள் தங்களது வாக்குரிமைகளை AGM நடைபெறும் இடத்தில் வாக்கு சீட்டு மூலம் வாக்களிப்பதற்கு நிறுவனம் ஏற்பாடு செய்யும்.

(c). தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு செய்துவிட்ட பிறகும் பங்குதாரர்கள் AGM-ல் பங்கேற்கலாம் ஆனால் கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(d). வரம்பு தேதி அன்று உள்ளபடி நிறுவனத்தால் பராமரிக்கப்படும் உறுப்பினர்கள் பதிவேட்டில் அல்லது பயனாளி உரிமையாளர்கள் பதிவேட்டில் பதிவாகி உள்ள பெயர்களை உடைய நபர்கள் மட்டுமே தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு மூலம் அல்லது வாக்கு சீட்டு மூலம் வாக்களிக்க உரிமையுடையவர்கள் ஆவர். AGM அறிவிப்பு அனுப்பப்பட்ட பிறகு நிறுவனத்தின் பங்குகளை ஒரு நபர் வாங்கி உறுப்பினர்களாகி வரம்பு தேதி அன்று பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தொலைவில் இருந்து E-வாக்குப்பதிவு செய்யும் உரிமையை பயன்படுத்தலாம். KFIN அவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பி தங்களது பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை பெற்றுக்கொள்ளலாம். பங்குதாரர் முன்னதாக KFIN டெக்னாலஜி நிறுவனத்திடம் பதிவு செய்திருந்தால் ஏற்கனவே உள்ள பயனர் பெயர் கடவுச்சொல்லை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

(e). மின்னணு முறையில் வாக்களிப்பது தொடர்பாக எந்தவொரு விளக்கமும் தேவைப்படும் உறுப்பினர்கள் திரு. பேரன் S N கமல் கிராந்தி - KFIN Tech அவர்களை தொடர்பு கொள்ளலாம். கட்டணம் இல்லா எண்: 18003094001 அல்லது evoting@kfintech.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும் அணுகலாம்.

(f). நிறுவனத்திடம் தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்திடாத பங்குதாரர்கள் / உறுப்பினர்கள் மின்னஞ்சல் மூலம் அறிவிப்புகள் அனுப்புவதற்கு வசதியாக நிறுவனத்தின் பதிவு அலுவலகத்திற்கு அஞ்சல் மூலமாக தனியாக கடிதம் அனுப்பி தங்களது மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்து கொள்ளலாம் அல்லது investor.relations@pcnl.in என்ற குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது பெயர், கணக்கு ஏடு எண், கைபேசி எண் போன்ற விபரங்களை வழங்கி பதிவு செய்து கொள்ளலாம்.

(g). மின்னணு முறையில் வாக்குப்பதிவு செய்வதற்கான வசதி குறித்து ஏதேனும் குறைபாடுகள் இருப்பின், விளக்கங்கள் தேவைப்பட்டால் அவை குறித்து பதிவு அலுவலகத்தில் உள்ள திரு. வசிதுல்லா அவர்களுக்கு மின்னஞ்சல் investor.relations@pcnl.in மூலம் அல்லது தொலைபேசி எண். 044-42316425 மூலம் தெரிவிக்கலாம்.

(h). மின்னணு மற்றும் வாக்குச்சீட்டு வாக்குப்பதிவு நடைமுறைகளை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் மேற்கொள்வதற்காக திரு. N. பாலச்சந்திரன், தொழில் புரியும் கம்பெனி செயலர், சென்னை அவர்கள் ஆய்வாளராக (Scrutinizer) நியமிக்கப்பட்டுள்ளார்.

தேதி: 05.09.2026
இடம்: சென்னை

புரபஷனல் கூரியர்ஸ் நெட்வொர்க் லிமிடெட்க்காக
அஹமது மீரான், நிர்வாக இயக்குனர், DIN 00094209

வேலை வாய்ப்புகள்

General

SBI
பாரத ஸ்டேட் வங்கி
மத்திய பணியமர்த்தம் மற்றும் பதவி உயர்வுத் துறை
கார்போரேட் மையம், மும்பை
மின்னஞ்சல் : crpd@sbi.co.in

ஒப்பந்த அடிப்படையில் துறை வல்லுநர் பணிநிலைப் பிரிவு அதிகாரிகளின் பணியமர்த்தம்

ஒப்பந்த அடிப்படையில், கீழ்க்கண்ட பதவிகளுக்காக இந்திய குடியுரிமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

விளம்பர எண் CRPD/SCO/2026-27/23

பதவியின் பெயர்	காலிப் பணியிடங்கள்	31.07.2026 அன்றுள்ள வயது (ஆண்டுகள்)	
		குறைந்தபட்சம்	அதிகபட்சம்
மண்டலத் தலைவர் (சில்லறை வணிகம்)	1	35	50
பிராந்தியத் தலைவர் (ஆர்ஹெச்)	5	35	50
தொடர்பு மேலாளர் - குழுத் தலைவர்	24	28	42
முதலீட்டு நிபுணர் (ஐஎஸ்)	9	28	42
முதலீட்டு அதிகாரி (ஐஓ)	4	28	40
துணைத் தலைவர் நிதிச் சேவைகள்	91	26	42
உதவி துணைத் தலைவர் நிதிச் சேவைகள்	73	23	35

இணையவழி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க மற்றும் இணையவழி விண்ணப்பக் கட்டணம் செலுத்த, தகுதி வரம்பு (வயது, தகுதி, அனுபவம், முந்தைய பணி போன்ற பிற விவரங்கள்), காலிப் பணியிடங்களின் விவரங்கள், தேவையான கட்டணம் மற்றும் பிற விவரங்கள் அறிய, வங்கியின் https://sbi.bank.in/web/careers/current-openings வலைதளத்தைப் பார்க்கவும். விண்ணப்பிக்கும் முன்னரும், கட்டணம் செலுத்தும் முன்னரும் தங்கள் தகுதி மற்றும் பிற விவரங்களை உறுதி செய்து கொள்ள விரிவான விளம்பரத்தை பார்க்கவும். ஏதேனும் சந்தேகங்களுக்கு, வங்கியின் அதிகாரப்பூர்வ [https://sbi.bank.in/web/careers/post-your-query] வலைதளத்திலுள்ள "CONTACT US" —> "Post Your Query" என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதவும்.

- **இணையவழி விண்ணப்பங்கள் பதிவு செய்ய மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய தேதி: 04.09.2026-லிருந்து 25.09.2026 வரை.**

இடம்: மும்பை
தேதி : 04.09.2026

பொது மேலாளர் (ஆர்பி மற்றும் பிஎம்)

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

(Formerly Known as Equitas Finance Ltd)

equitas SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A வின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
திரு/திருமதி. ராஜேந்திரன் திரு/திருமதி. லதா ராஜேந்திரன் (இருவரின் முகவரி: எண். 984, வடக்கு தெரு, திருக்கோணம், சிலம்பூர் 80- திருச்சி, தமிழ்நாடு-608901)	அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், சிலம்பூர் வடக்கு கிராமத்தில், சர்வே எண் 68/2E1-ல் அமைந்துள்ள, 5 சென்ட் (அல்லது 2180 சதுர அடி) பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; எல்லைகள்: வடக்கு; அம்சவள்ளிக்குச் சொந்தமான சொத்து, தெற்கு; கோவிந்தசாமிக்குச் சொந்தமான சொத்து, கிழக்கு பாதை, மேற்கு : துரைசாமிக்குச் சொந்தமான சொத்து.	ரூ.3,50,000/- ரூ.35,000/- ரூ.10,000/-	30.09.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SETRPPA0464197 26.06.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.3,33,047/- மேலும் 27.06.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற. (07.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.4,46,831/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237 , கலையரசன்.K 9789554821 , சந்துரு 9629121731				
திரு/திருமதி ஆனந்தன் L C/O திரு/திருமதி லட்சுமணன் திரு/திருமதி மணிமேகலை A C/O திரு/திருமதி ஆனந்தன் (இருவரின் முகவரி: 621, மேற்குத் தெரு, தெற்குப்பட்டி, அரியலூர், தமிழ்நாடு - 621710)	அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டம், மருதூர் கிராமத்தில் அமைந்துள்ள, சர்வே எண் 112/3Aல் அடங்கிய 350 சதுர மீட்டர் (3766 சதுர அடி) பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி; எல்லைகள்: வடக்கு பாதை, தெற்கு வசந்தா அவர்களின் சொத்து, கிழக்கு ராஜாராம் அவர்களின் சொத்து, மேற்கு இளவரசன் அவர்களின் சொத்து.	ரூ.9,00,000/- ரூ.90,000/- ரூ.10,000/-	30.09.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEJYKDM0448633 / 200002272750 30.10.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.8,89,403/- மேலும் 31.10.2025 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற. (07.09.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.11,78,937/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: சதீஷ் 9940286237 , ஆண்டனி மரியா லியோ 9715386558 , சந்துரு 9629121731				

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 29.09.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www. Equitasbank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.

சுந்தரம் மியூச்சுவல்

— சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டத் தகவல் ஆவணம் (SID) மற்றும் முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) ஆகியவற்றுக்கான அறிவிப்பு மற்றும் இணைப்பு

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் தயாரிப்பு லேபிளிங் ('ரிஸ்க்-ஓ-மீட்டர்') திருத்தம்

முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், மார்ச் 20, 2026 தேதியிட்ட முதன்மைச் சுற்றறிக்கையின் பிரிவு 6.16.1-ஐயும், அதனுடன் சேர்த்துப் படிக்கையில், நவம்பர் 05, 2024 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண் SEBI/HO/IMD/PoD1/CIR/P/2024/150-ஐயும் கொண்டு, சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் ("ஃபண்ட்") திட்டங்களின் ரிஸ்க்-ஓ-மீட்டர் (Risk-O-Meter) கீழ்க்கண்டவாறு திருத்தப்படும்.

திட்டத்தின் பெயர்	தற்போதுள்ள ரிஸ்க்-ஓ-மீட்டர் (ஜூலை 31, 2026 இன் ஸ்கீம் போர்ட்ஃபோலியோவின் அடிப்படையில்)	திருத்தப்பட்ட ரிஸ்க்-ஓ-மீட்டர் (ஆகஸ்ட் 31, 2026 இன் ஸ்கீம் போர்ட்ஃபோலியோவின் அடிப்படையில்)
சுந்தரம் ஓவர்நைட் ஃபண்ட்	 The risk of the scheme is Low	 The risk of the scheme is Low to Moderate
சுந்தரம் லிக்விட் ஃபண்ட்	 The risk of the scheme is Low to Moderate	 The risk of the scheme is Moderate
சுந்தரம் மணி மார்கெட் ஃபண்ட்	 The risk of the scheme is Low to Moderate	 The risk of the scheme is Moderate

மேலே குறிப்பிட்டுள்ளபடி ரிஸ்க்-ஓ-மீட்டர்களில் ஏற்பட்ட மாற்றத்தைத் தவிர, இயற்கை, முதலீட்டு நோக்கம், சொத்து ஒதுக்கீடு முறை, மேலே குறிப்பிடப்பட்ட திட்டங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளிட்ட திட்ட அம்சங்களில் வேறு எந்த மாற்றமும் இல்லை என்பதை முதலீட்டாளர்கள் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கிய தகவலின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவலின் அறிக்கை மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவலின் அறிக்கை (SAI)யின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த சேர்க்கை அமைகிறது.

இடம்: சென்னை
தேதி: செப்டம்பர் 10, 2026

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபிசர்

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம்: 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாட்டு இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.